# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.33/2024

2025 -ம் ஆண்டு ஜுன் மாதம் 26 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 26.06.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கிருஷ்ணகுமார் (PW-1) | வயது | : | 63 /2025 |
| க/த பெயர் | : | திரு. வெங்கடாசலம் | தொழில் | : | அரசு ஊழியர் (ஓய்வு) |
| முகவரி | | அஸ்தினாபுரம், சென்னை | வட்டம் | : | சென்னை |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் 1வது சாட்சியாவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

08.04.1976 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வாதியின் தாத்தா ராமன் செருமடார் அவர்கள் வாதி பெயருக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் அசல் ஆவணத்தை குறியீடு செய்ய பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மோசடியாக வாதியால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்ய வேண்டும் என வாதம் செய்ததை இந்நீதிமன்றம் பரிசீலணை செய்ததில் மேற்படி உயில் ஆவணமானது அசல் ஆவணமாகவும், தாவா சொத்து குறிப்பிட்டும் வழக்கு தரப்பினர் ஒருவருக்கு எழுதப்பட்டுள்ளதால் பிரதிவாதியின் வழக்கறிஞர் முன்வைத்த ஆட்சேபணையுடன் குறியீடு செய்ய வேண்டும் என்ற வாதம் நிராகரிக்கப்பட்டு வாதி தரப்பில் ஆவணத்தை குறியீடு செய்ய இந்நீதிமன்றம் அனுமதியளிக்கிறது.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறியீடு விவரம் |
|---|---|---|---|
| 1 | 08.04.1976 | தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வாதியின் தாத்தா ராமன் செருமடார் அவர்கள் வாதி பெயருக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 26.07.2022 | தேதியிட்டபிரதிவாதி பெயரில் உள்ள சொத்தின் கிரய ஆவணம் சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 26.05.2023 | தேதியிட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்று | வா.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| | | கணினி நகல் | |
| 4 | 05.06.2023 | தேதியிட்ட 1, 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 07.06.2023 | தேதியிட்ட 1, 2 ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் | வா.சா.ஆ.5 |

எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 16:26:23 +0530

District Munsif

Mannargudi.